**செய்தி வெளியீடு எண்: 929** **நாள்04.12.2020**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி. K. பழனிசாமி அவர்களிடம் வேலை வேண்டி மனு அளித்த அ.மஸ்தான் பாதுஷா என்ற மாற்றுத்திறனாளிக்கு உடனடியாக பணிநியமன ஆணை வழங்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு கொரோனா வைரஸ் தடுப்புப் பணிகள், மாவட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காக மதுரையிலிருந்து கார் மூலமாக சிவகங்கை வரும் வழியில், அவரது வாகனம் மதுரை முக்கு இடத்திற்கு சென்ற போது சிவகங்கை மாவட்டம் காரைக்குடியைச் சேர்ந்த அமானுல்லா என்பவரது மகன் அ.மஸ்தான் பாதுஷா அவர்கள் கோரிக்கை மனுவுடன் சாலையோரம் காத்திருந்தார். ஒரு மாற்றுத்திறனாளி தனது கையில் கோரிக்கை மனுவுடன் காத்திருப்பதைக் கண்டறிந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது காரை நிறுத்தி மாற்றுத்திறனாளியிடம் மனுவைப் பெற்றுக் கொண்டு, உனக்கு என்ன தேவை என கேட்டறிந்தார். அப்போது நான் இரண்டு கால்களும் ஊனமுற்ற மாற்றுதிறனாளியாக உள்ளேன். நான் பி.பி.ஏ., பி.ஜி.டி.சி.ஏ வரை படிப்பு முடித்துள்ளேன். ஆகவே, எனக்கு ஏதாவது ஒரு அரசுத்துறையில் பணியிடம் வழங்குமாறு கோரிக்கை வைத்தார். மாற்றுத்திறனாளியின் கோரிக்கையை கனிவுடன் கேட்டறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக சுகாதாரத்துறை அலுவலர்களிடம் தொடர்பு கொண்டு இரண்டு கால்களும் ஊனமுற்ற மாற்றுத்திறனாளிக்கு ஏதாவது பணியிடம் உடனடியாக வழங்கிட வேண்டும் என உத்தரவிட்டார்.

அதன்படி இரண்டு கால்களும் ஊனமுற்ற மாற்றுத்திறனாளி அ.மஸ்தான் பாதுஷா என்பவருக்கு காரைக்குடி அரசு மருத்துவமனையில் உள்ள இரத்த வங்கி பிரிவில் விவர உள்ளிட்டாளர் பணிக்கு நியமனம் செய்யுமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். அதனடிப்படையில் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வரவழைத்து அங்கு நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் மனு அளித்த மாற்றுத்திறனாளிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பணிநியமன ஆணையை வழங்கினார்கள்.

மனு அளித்த சில மணிநேரத்திலேயே உடனடி நடவடிக்கை எடுத்து, எனது குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டு எனக்கு மாதம் ரூ.15,000 ஊதியம் பெறுவதற்கான வழிவகை செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மாற்றுத்திறனாளி தனது நெஞ்சார்ந்த நன்றியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**